/அவசரம்/

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4377/ஆ3/2023 நாள். 05.04 .2024

பொருள் பள்ளிக் கல்வி – கல்வி உதவித்தொகை திட்டம் 2022- 2023 ஆம் கல்வி ஆண்டு- பள்ளிப்படிப்பை இடைநிறுத்தம் செய்த பிற்ப்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவியர்களின் விவரங்கள் கோருதல் தொடர்பாக

பார்வை சென்னை- 5 பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையரின் கடிதம் ந.க.எண். டி2/5376/2022 நாள். 02.04.2024.

-----

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு பள்ளிகளில் 2022-2023 ஆம் கல்வி ஆண்டில் 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு பயின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவியர்களின் விவரங்கள் பெறப்பட்டதில் இத்திட்டத்தின் வாயிலாக கல்வி உதவித்தொகை வழங்கப்படாமல் நாளது தேதி வரை 288 மாணவிகள் நிலுவையில் உள்ளனர்(பிற்ப்படுத்தப்பட்ட வகுப்பு மாணவிகள் 151+ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவிகள்137)

மேற்படி 288 மாணவிகள் இடைநிறுத்தம்,பள்ளி மாறுதல்,தொடர் விடுப்பு மற்றும் இதர காரணங்களால் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்களால் பரிந்துரைக்க இயலாத மாணவிகளின் விவரங்களின் தொகுப்பு அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது,இதில் உள்ள மாணவிகளின் விவரங்களை சரிபார்த்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில்(படிவம் 1 பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவிகளின் விவரங்கள்,படிவம் 2 மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவிகளின் விவரங்கள்) பூர்த்தி செய்து சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியரின் கையொப்பத்துடன் 09.04.2024 மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலக ஆ3 பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு அனைத்து அரசு உயர்/மேல் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு.

1. தொகுப்பு அறிக்கை
2. படிவங்கள் 1 மற்றும் 2

(ஒப்பம்)

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர்.

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள்,
அனைத்து அரசுஉயர்/மேல்நிலைப்பள்ளிகள்.
வேலூர் மாவட்டம்.

.

-